

சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று (23.01.2024) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் தலைமையில், சென்னைக்கு அருகில் ஜவுளி நகரம் அமைப்பதற்கு திருமழிசையில் உள்ள வீட்டுவசதி வாரியத்தின் 64.03 ஏக்கர் பரப்பளவிலான நிலத்தொகுப்பினை தேர்வு செய்வது குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில். வீட்டுவசதி வாரியத்தின் பெருந்தலைவர் பூச்சி எஸ். முருகன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், தமிழ்நாடு வீட்டுவசதி துறை அரசு செயலாளர், சி.சமயமூர்த்தி, துணிநூல் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வீரவணக்க நாள் கூட்டம்!

# ஆவடியில் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் சிறப்புரை!

### எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. - சா.மு.நாசர் எம்.எல்.ஏ. - நிர்வாகிகள் பங்கேற்பு!

திருவள்ளூர், ஜன.24-

ஆவடியில் நடைபெறும் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் சிறப்புரையாற்றுகிறார்.

இதில் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., ஆவடி சாமு. நாசர் எம்.எல்.ஏ. ஆகியோர் வீரவணக்க நாள் வீச்சுரையாற்றுகிறார்கள்.

இதில் ஆ.கிருஷ்ணசாமி, நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி மாநகர திமுக சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் நாள் பொதுக்கூட்டம் ஆவடி மாநகராட்சி அருகில் உள்ள கலைஞர் திடலில் நாளை (25-01-2024, வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில் நடைபெறுகிறது.

இதில் மாநகர பொறுப்பாளர் சண்.பிரகாஷ் தலைமை தாங்கினார். பகுதி கழக செயலாளர் ஜி.ராஜேந்திரன் துவக்க உரையாற்றுகிறார்.

மாநில மாணவரணி இணைச்செயலாளர் சி.ஜெரால்ட், ஆவடி மாநகர மேயர் ஜி.உதயகுமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வி.தியாகராஜன் மற்றும் ஆவடி தெற்குப் பகுதி கழக நிர்வாகிகள் இராருக்கு, கோ.கார்த்திகேயன், தா. வின்சன், கீதா யுவராஜ், இரா.செல்வராஜ், ஆவடி பாலா, கே.ஹரி, எம்.குமார், எம்.ராஜேந்திரன், கேஏ.சகாபுதின் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இக்கூட்டத்தில் கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், முன்னாள் ஒன்றிய அமைச்சர் கழக கொள்கை பரப்பு செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி.சாமு.நாசர் எம்.எல்.ஏ. ஆகியோர் வீரவணக்க நாள் உரைவீச்சாற்றுகிறார்கள்.

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், பகுதி கழக செயலாளர்கள் பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், மாவட்ட கழக நிர்வாகிகள் ம. இராஜி, விஜி.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், ஒ.ஆர்.நாகூர்கனி, பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி. விமல் வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ. மகாதேவன், காஞ்சனா சுதாகர் மற்றும் ஒன்றிய நகர தேர்வு கழக செயலாளர், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.



சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நேற்று (23.01.2024) செங்கல்பட்டு மாவட்டம். கிளாம்பாக்கம் ”கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு போக்குவரத்துக் கழக பேருந்துகள் (SETC, TNSTC & MTC) முறையாக இயக்கப்படுவது குறித்தும் மற்றும் ஆம்னி பேருந்துகள் இம்முனையத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு முழுமையாக இயக்குவது குறித்தும் உரிய நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக துறைச் சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா. சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் (CUM TA) சிறப்பு அலுவலர் ஐ.ஜெயக்குமார். ஐ.ஆர்.டி.எஸ். போக்குவரத்துத்துறை ஆணையர் அ.சண்முகசுந்தரம். மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், பெருநகர சென்னை காவல் கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) சுதாகர், காவல் நுணை ஆணையர்கள் (தாம்பரம் சட்டம் மற்றும் ஒழுங்கு) பவன் குமார். (தாம்பரம் போக்குவரத்து) ந.குமார் (சென்னை வடக்கு, போக்குவரத்து) பி.குமார், SETC மேலாண் இயக்குநர் கே.இளங்கோவன், உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தலைமை - பி.எம்.தேவராஜ்! வேலூர் மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில்,

# மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்!

வேலூர், ஜன.24-

வேலூர் மாவட்ட திமுக மாணவரணி சார்பில், மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் 25.01.2014 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கத்தில் நடைபெறுகிறது.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆர்.பிரபாகரன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அரவிந்த் அசோகன் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மொழிப்போர் தியாகி கோ.மாசிலாமணி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் டி.சுந்தர், வி.விக்ரம், டி. ஹறிநாத், பி.ஸ்ரீதேவி முன்னிலை வகிக்கினறனர்.

கழக துணை அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றுகிறார்.

மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., சிறுவனூர் பரசுராமன், மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, வேலூர் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் - மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி தலைவர் டி.எம். கதிர் ஆனந்த், மாநில மகளிர் பிரச்சார குழு அணி செயலாளர் அமுலுவிஜயன் எம்.எல்.ஏ., மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் துணை அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், இந்நாள் முன்னாள் கழக முன்னோடிகள், வட்ட, வார்டு, ஊர் கிளை நிர்வாகிகள், மாணவர் அணியினர் அனைவரும் திரளாக கலந்து கொண்டு மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துவோம்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை ஏற்பாடு வேலூர் மாவட்ட மாணவர் அணி செய்துள்ளனர்.

